[1969 செப்டம்பர் 11

* 192 வினா.—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கோவை தலைமை மருத்துவ மனைக்கு காசநோயால் பாதிக்கப்பட்டவர்கள் (T.B.) அதிகம் வருவதால் தற்போது உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுதிலிருந்து படுக்கைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சு. துரைசாமி : கோவையில் இருக்கும் மருத்துவ மனைக்கு இந்தக் காச நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் சென்றால், ஒரு வாரம் கூடத் தங்க வைக்காமல், அங்கு அதிகமான நோயாளிகள் வருகிறார்கள் என்று சொல்லி, அனுப்பிவிடுகிறார்கள். அதனால், பூரணமாகக் குணம் பெறாமலேயே வெளியேற வேண்டியிருக்கிறது. ஆகவே, இனிமேலாவது படுக்கை வசதிகளை அதிகரித்து, நோயாளிகள் பூரண குணம் அடைந்தபின் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியே அனுப்பும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலில் குறிப்பிட்டபடி, மருத்துவ மனையில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட வேண்டியவர்கள் என்றும், வீட்டிலேயே இருந்து சிகிச்சை பெறுகிறவர்கள் என்றும் இரண்டு வகையாகப் பிரித்து, சிகிச்சை அளிக்கப்படுகின்றார்கள். கோவை தலைமை மருத்துவ மனையில் 75 படுக்கைகள் எலும்பு உருக்கி நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கென்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 50 படுக்கைகள் ஆண்களுக்கும், 25 படுக்கைகள் பெண்களுக்கும் என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைத் தவிர, இப்பொழுது சிகிச்சை அளிப்பதில் அவரவர்கள் இருக்கும் இடங்களிலேயே அளிக்கப்படுகிறது. நூறு சப்-ஸெண்டர்கள் அமைக்கப்பட்டு, வட்ட மருத்துவமனை அடிப்படையிலும், ஆரம்ப சுகாதார நிலைய அடிப்படையிலும் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. எந்த நோயாளிகளை அங்கே வைத்துச் சிகிச்சை அளிக்கவேண்டும் என்று டாக்டர்கள் எண்ணுகிறார்களோ, அவர்களைமட்டும்தான் அங்கே வைத்துக்கொள்கிறார்கள். ஆனால், அநேக நோயாளிகள் மருத்துவ மனையிலேயே இருந்து சிகிச்சை பெறவேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆகவே, வைக்க தேவைப் படாத நோயாளிகள் மருத்துவ மனையில் இருந்து சிகிச்சை பெறவேண்டும் என்று விரும்புவதன் காரணமாகத்தான் இட நெருக்கடி ஏற்படுகிறது. யாரை மருத்துவ மனையில் வைக்க வேண்டும், யாரை வீட்டில் வைத்துச் சிகிச்சை அளிக்கவேண்டும் என்று டாக்டர்கள் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருப்பதால், அநேகம் பேர்கள்—மருத்துவ மனையில் வைத்திருக்கத் தேவை யில்லாத நோயாளிகள்—வீட்டுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

1969 செப்டம்பர் 11]

திரு. டி. எஸ். ஆதிமூலம்: ஐயா, இந்த எலும்பு உருக்கி நோய் சம்பந்தமாக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஆயிரக்கணக்கானவர்கள் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரிக்குப் போனால், அங்கே பத்துப் படுக்கைகள், இருபது படுக்கைகள்தான் இருக்கின்றன என்ற நிலையில், " இடம் இல்லை " என்று நோயாளிகள் வெளியே அனுப்பப் படுகிறார்கள். முக்கியமாக ஏழை மக்கள் இதனால் மிகவும் அல்லலுறுகிறார்கள். ஆகவே, ஜில்லாதோறும் உள்ள பெரிய ஹெட்க் வார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளிலும், தாலுக்காத் தலைநகர ஆஸ்பத்திரிகளிலும் படுக்கை வசதிகளை அதிகப்படுத்தி, எலும்பு உருக்கி நோயினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு நிவாரணம் அளிப்பது பற்றி ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா? அப்படியானால் அது எந்த முறையில் இருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, எலும்பு உருக்கி நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் படுக்கை வசதி செய்வது போதுமானது என்று கூறுவதற்கில்லை. ஆனால், படுக்கை வசதிகளை மாவட்ட மருத்துவ மனைகளில் அதிகரிக்கும் செயற்குறிப்பு இருக்கிறது. நிதி நிலை நெருக்கடியின் காரணமாகத்தான் கட்டடங்கள் கட்டுவதுபோன்ற வேலைகள் எடுக்கப் படாமல் இருக்கின்றன. முறைப்படி ஆராயப்பட்டு அவற்றின் அடிப்படையில் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

Private practice by Government doctors

* 193 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether the Government have any proposal to prohibit private practice by Government doctors?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இப்பொழுது அப்படி ஒரு திட்டம் இல்லை.

திரு. ஏ. எம். ராஜா: தலைவர் அவர்களே, பெரும்பாலும் அரசாங்க ஆஸ்பத்திரிகளில் வேலை செய்கின்ற டாக்டர்கள் தனியாகவும் தொழில் செய்வதால், அங்கே வருகின்ற நோயாளிகளுக்குத் தங்கள் வீட்டுக்கு வந்து கன்ஸல்டேஷன் செய்துகொண்டால்தான் ஆஸ்பத்திரியில் ஒழுங்காக ட்ரீட்மென்ட் செய்கிறார்கள் என்ற குறைபாடு இருக்கிறது. ஆகவே, அந்தக் குறையைப் போக்குவதற்காக அரசு உடனடியாக அரசாங்க டாக்டர்கள் தனியாகத் தொழில் செய்வதைத் தடை செய்ய முன்வருமா? இது போன்று மற்ற மாநிலங்களில் தடை செய்து இருக்கின்றார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதுபற்றி இருவிதக் கருத்துக்கள் இருந்து வருகின்றன. இது அவ்வப்போது ஆராயப்பட்டும் வருகின்றது. ஆந்திர மாநிலத்தைப் பொறுத்தவரையில், அண்மையில் அவர்கள் ப்ரைவேட் ப்ராக்டிஸ் செய்யக்கூடாது என்று சொல்லி, ஊதிய உயர்வு தந்து,